# திடீர் வெள்ளத்திற்கு உடனடித் தீர்வு காண்பீர்

## கெஅடிலான் கட்சி வலியுறுத்தல்



கோலாலம்பூர், ஆக. 24-

கனத்த மழை பெய்யும்போது தலைநகரைச் சுற்றி பல பகுதிகளில் ஏற்பட்டு வரும் திடீர் வெள்ளத்திற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் உடனடி தீர்வு காண வேண்டும் என கெஅடிலான் கட்சியின் கூட்டரசுப் பிரதேச இளைஞர் பிரிவின் தகவல் பிரிவு தலைவர் அஸஹா சலாஹுடின் நேற்று வலியுறுத்தினார்.

தலைநகரில் கனத்த மழை பெய்யும்போது தலைநகரின் பல பகுதிகளில் திடீர் வெள்ளம் அது பெரும் போக்குவரத்து நெரிசல் உட்பட பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது.

எனவே, கோலாலம்பூர் மாநகர் மன்றம் இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த திடீர் வெள்ளம் தனிநபர்களுக்கு பல்வேறு இழப்புகளை ஏற்படுத்தி வரும் அதேவேளையில், அது பொருளாதார இழப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது என்பதால், தொழில்நுட்பத்தின் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண கோலாலம்பூர் மாநகர் மன்றம் புதிய வரைத்திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் தலைநகரில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் அடிக்கடி தலைநகரில் நிலவி வரும் ஒரு விவகாரமாகும். எனவே அரசாங்கம் இதனை கடுமையாகக் கருதுவதோடு, இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண அனைத்து தரப்பினரும் விவேக நடவடிக்கையில் இறங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

வேலைக்குச் செல்லும் தரப்பினர், பொதுமக்கள், வியாபாரிகள், நிறுவனங்கள் என பல்வேறு தரப்பினர் இதனால் பாதிக்கப்பட்டு வருவதால், இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவர் கூறினார்.

கனத்த மழை பெய்ததைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தலைநகரில் பல இடங்களில் திடீர் வெள்ளம் ஏற்பட்டதை உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

கோலாலம்பூரிலுள்ள இரட்டைக் கோபுரம் அருகிலுள்ள சமிக்ஞை விளக்கு, சிகாம்புட் சாலை, ஜாலான் சுல்தான் அஸ்லான் ஷா, ஜாலான் பகாங், ஜாலான் கெந்திங் கிளாங், ஜாலான் டூத்தமாஸ் ஆகிய சாலைகளில் திடீர் வெள்ளம் ஏற்பட்டிருந்தன.

தலைநகரில் ஏற்படும் திடீர் வெள்ளத்தைச் சமாளிக்க கோலாலம்பூர் மாநகர் மன்றம் 14 இடைக்கால தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் கூறப்பட்டது.